**Dated : 29.04.2025**

**O.S.No. 46/2024**

**PW.1 – திரு. ராஜாராம்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என் தகப்பனார் பெயர் வேணுகோபால். எங்கள் குடும்பத்தில் 3 மகன்கள், 3 பெண்கள். இந்த வழக்கினை அண்ணன் தம்பி 3 பேரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, நான் மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தகப்பனார் எனக்கும், என்னுடைய சகோதரர் ஜெயபால் என்பவருக்கும் சொத்தை பிரித்து, இருவருக்கும் எழுதிக்கொடுத்திருக்கிறார். என்னுடைய தகப்பனார் சுமார் 20 வருடங்களுக்கு முன்னாள் வாய்மொழியாக சொத்தை பிரித்துக்கொடுத்துவிட்டார். அந்த சொத்தினை இருவருக்கும் தனித்தனியாக பிரித்து எழுதிக்கொள்ளலாம் என்று கேட்ட போது என்னுடைய சகோதரர் மறுக்கிறார். அந்த சொத்து என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் அவர் சம்பாதித்த சொத்தாகும். என்னுடைய தகப்பனார் எனக்கு எப்போது சொத்து எழுதிக்கொடுத்தார் என்றால் 2004ம் வருடம் பிப்ரவரி 28ம் தேதி சொத்து எழுதிக்கொடுத்தார். சொத்து எழுதிக்கொடுத்த நாளது வரை நீங்கள் பிரித்துக்கொள்ளாமல் பொதுவாக தான் பயன்படுத்துகிறீர்களா என்றால் என் தகப்பனார் வாய்மொழியாக பிரித்து கொடுத்த சொத்தை ஓட்டி வருகிறோம்.

தானம் எழுதி கொடுப்பதற்கு முன்னாள் சொத்தை பிரித்து கொடுத்தாரா, தானம் எழுதப்பட்ட பிறகு சொத்தை பிரித்துக்கொடுத்தாரா என்றால் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு, பின்னிட்டு சொத்தை பிரித்துக்கொடுத்தார். அதற்கு பின்னிட்டு நானும், என்னுடைய சகோதரரும் விவசாயம் செய்து வருகிறோம். வாய்மொழியாக பிரித்து கொடுக்கப்பட்ட பிறகு எனக்கு பிரித்து கொடுத்த பாகத்தை நான் தனியாக விவசாயம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் ஓசூரில் குடித்தனம் செய்துக்கொண்டிருந்த காரணத்தினால் என்னுடைய சகோதரர் தான் என்னுடைய பாகத்தையும் சேர்த்து ஓட்டி கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, என்னுடைய தகப்பனார் தான் ஓட்டிக்கொண்டிருந்தார். எனக்கு வாய்மொழியாக பிரித்து கொடுத்த போது எவ்வளவு நிலம் இருந்தது, எனக்கு எவ்வளவு ஏக்கர் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 4 அல்லது 4 1/2 ஏக்கர் இருக்கும், என்னுடைய சகோதரருக்கு 4 அல்லது 4 1/4 ஏக்கர் இருக்கலாம். அந்த சொத்தில் எத்தனை கிணறு உள்ளது என்றால் ஒரு கிணறு உள்ளது. அதன் சர்வீஸ் எண் என்னுடைய தகப்பனார் பெயரில் உள்ளது.

அந்த கிணற்றில் நானும் என் சகோதரரும் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கிறோம் என்றால் சரிதான். அதை தவிர அந்த நிலத்தில் வேறு ஏதேனும் கிணறுகள் உள்ளதா என்றால் 2018ல் என்னுடைய சுய சம்பாதியத்தில் நான் கிணறு வெட்டினேன். 2010ம் ஆண்டு ஒரு இலவச சர்வீஸ் வந்தது, என்னுடைய சகோதரர் தனக்கு இயலாது என்றும், வேண்டுமென்றால் நீ வாங்கிக்கொள் என்றார், அதனால் அதை நான் வாங்கி கொண்டு பயன்பாட்டில் வைத்திருக்கிறேன். அந்த இலவச சர்வீஸ் பெறுவதற்கு யார் மனு கொடுத்தது என்றால் என்னுடைய தகப்பனார் மனு கொடுத்தார். அந்த இலவச சர்வீஸ் கிணறு வேறு கிணறு என்றால் சரிதான். இலவச கிணற்றினை என் தகப்பனார் தான் வெட்டினார் என்றால் சரிதான். எல்லோரும் ஒன்றாக இருக்கும் போது வெட்டியது. அந்த கிணறு என்னுடைய பாகத்திற்கு வந்தது. என்னுடைய சகோதரர் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்ன காரணத்தினால் தான் எனக்கு அந்த சர்வீஸ் வந்தது என்றால் சரிதான்.

என்னுடைய மூத்த சகோதரர் பழைய கிணற்று சர்வீசை அவர் பயன்படுத்தி கொள்வதற்காக, ரூ.1.00 இலட்சம் பணம் என்னிடம் புதியதாக கிணறு வெட்டி கொள்வதற்காக கொடுத்தார், அதை தான் நான் தற்போது பயன்படுத்தி வருகிறேன் என்று சொன்னால் அவர் எனக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு அவர் எனக்கு பணம் கொடுத்ததற்கு பின்னிட்டும், நான் மீண்டும் பழைய கிணற்றிலும் நீர் எடுத்த காரணத்தினால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் அவர் எனக்கு பணம் கொடுக்கவில்லை, நான் அந்த கிணற்றிற்கு சென்றால் அவர் என்னை அடிக்க வருகிறார். 2004ல் என் தகப்பனார் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். அதற்கு பின்னிட்டு நானும், என் சகோதரரும் யார் யாருக்கு எவ்வளவு நிலம் என்று அளந்து பார்த்து எடுத்துக்கொண்டோமா என்றால் சரிக்கு பாதியாக அளந்தோம், அதற்கும் அவர் ஒத்துவரவில்லை. அவ்வாறு அளக்கப்பட்ட போது எனக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு என் சகோதரரை விட 34 சென்ட் அதிகமாக காணப்பட்டது.

எனக்கு அதிகமாக 34 சென்ட் அதிகமாக இருந்த காரணத்தினால் சமமாக பிரித்துக்கொள்வதற்கு நான் ஒப்புக்கொண்டேனா என்றால் ஒப்புக்கொண்டேன். என் சகோதரருக்கு கொடுக்கப்பட்ட இடத்தில் தான் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் சகோதரர் குடியிருக்கும் இடத்திலுள்ள வீடு பொதுவில் கட்டப்பட்ட வீடு தான். ஊரில் வீடு இருப்பதாக கூறுகிறேன், அது கீழ்குப்பத்தில் உள்ளது. அந்த இடம் எவ்வளவு சென்ட் என்றால் மொத்தம் 12 சென்ட், வீடு 3 சென்ட் இருக்கும். அந்த வீடு

பழைய காலத்து ஓட்டு வீடு என்று சொன்னால் சரிதான். சாட்சி தாமே கூறுகிறார் அதனை மாற்றம் செய்துள்ளேன். அந்த வீட்டை என்னுடைய பெரிய அண்ணனுக்கும், ஜெயபாலுக்கும் ஒதுக்கி கொடுத்தார் என்றால் சரிதான், சாட்சி தாமே கூறுகிறார், ஜெயபாலுக்கு பணம் கொடுத்து பெரியவர் அந்த வீட்டை வாங்கிக்கொண்டார். எனக்கு அங்கு வீடே இல்லை, என் அப்பா கட்டி கொடுத்தது தான் என்றால் சரியல்ல, நானே சுயமாக சம்பாதித்து கட்டிக்கொண்டேன், அது தவிர காலி இடமும் உள்ளது என்றால் உள்ளது. அந்த காலி இடத்தை பிரதிவாதி ஜெயபாலுக்கு கொடுப்பதாக எனது அப்பா சொன்னார் என்றால் அவர் 3 பேருக்கும் தான் சொன்னார்.

என் அப்பாவிற்கு 3 மகன்கள் இருந்தும், ஜெயபால் மீது மட்டும் வழக்கு போட காரணம் என்ன என்றால் எனக்கு சொந்தமான சொத்தை ஜெயபால் பிரித்து தர மறுத்ததால் வழக்கு போட்டுள்ளேன். என் பெரிய அண்ணன் பெயர் விஜயராகவன், அவர் தற்போது இறந்துவிட்டார். அவருக்கு எந்த சொத்து கொடுக்கப்பட்டது என்றால் என் தகப்பனாருடைய பூர்வீக சொத்து கொடுக்கப்பட்டது. பூர்வீக சொத்தில் எனக்கும், ஜெயபாலுக்கும் பங்கு இல்லையா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு பூர்வீக சொத்துக்கள் எவ்வளவு உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. பூர்வீக சொத்திற்கு நாளது வரை என் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் உள்ளது. இன்றைய நாள் வரை பூர்வீக சொத்தில் பாகம் எதுவும் எங்கள் குடும்பத்தில் பிரிக்கவில்லை என்றால் சுமார் 4 1/2 ஏக்கர் மட்டும் பிரிக்கப்படவில்லை. பூர்வீக சொத்து 4 1/2 ஏக்கரில் என் சகோதரர் ஜெயபால் பங்கு கேட்ட காரணத்தினால், நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பங்கு பிரித்த காலத்திலிருந்தே நிலத்தை ஓட்டவே இல்லை, என்னுடைய சகோதரர் தான் ஓட்டிவருகிறார் என்றால் சரியல்ல. நான் ஓசூரில் குடியிருக்கிறேன்.

என் சகோதரர் ஜெயபால் தான் நிலத்தை முழுவதும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு தான், தற்போது ஓட்டி வருகிறேன், அதற்கு முன்னர் வரை என் சகோதரர் தான் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. பொது கிணற்றிற்காக நான் பணம் பெற்றுக்கொண்ட போதும், மீண்டும் அந்த கிணற்றில் தண்ணீர் எடுத்து கொள்வதால் தான் பிரச்சனை வந்தது என்றால், நான் பணம் எதுவும் பெறவில்லை. நான் 120 தென்னங்கன்று வைத்ததாக சொல்வது தவறான சங்கதி என்றால் 150 தென்னங்கன்று வைத்தேன். எனக்கு பாகத்தில் கிடைத்த சொத்தில் நான் 150 தென்னங்கன்று வைத்துள்ளேன். நான் எந்த காலத்திலும் தென்னங்கன்று வைக்கவில்லை, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

சர்வே செய்து நிலத்தை அளந்ததில் ஜெயபாலுக்கு எவ்வளவு பிரிக்கப்பட்டது என்றால் அவருக்கு 4 ஏக்கர் 21 செண்ட் நிலம் கிடைத்தது. நான் சொல்வது தவறு என்னுடைய நிலத்தை அளந்து பார்த்த போது 92 செண்ட் நிலம் எனக்கு அதிகமாக காணப்பட்டது என்றால் சரியல்ல. அதிகம் காணப்பட்ட 92 செண்ட் நிலத்தில் சரிபாதியாக கேட்ட காரணத்தினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சரிபாதியாக பிரித்து அளந்துக்கொள்வதற்கு எனக்கு சம்மதமா என்றால் கண்டிப்பாக சம்மதிக்கிறேன். நீதிமன்றம் மூலமாக ஆணையாளரை நியமித்து சரிபாதியாக அளந்துக்கொள்ள சம்மதமா என்றால் சம்மதம் தான். நான் சரிபாதியாக பிரித்துக்கொடுக்க சம்மதிக்கிறேன். உண்மைக்கு மாறான விவரங்களை கூறி நான் வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்திலும் எங்களுக்குள் பாகம் பிரிக்கவில்லை என்றால் பூர்வீக சொத்தில் 6 பேருக்கு பாத்தியம், 6 பேர் பாகம் பிரிக்கும் போது எனக்கும் பாகம் வேண்டும். என் சகோதரிகள் யார் யார் என்றால் இந்திரா, வாசுகி, சுகுணாம்மாள். அவர்களுக்கும் சொத்தில் பங்கு கொடுக்க தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சொல்லி, இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.